மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) மதுரையி லுள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து துறைப் பணியாளர்கள் 1969 ஜூலைத் திங்கள் 18-ஆம் நாளன்று காலை வண்டிகளை எடுக்க மறுத்தனர். அன்று பகல் 11-15 மணியளவில் போக்குவரத்துப் பணி மீண்டும் தொடங்கியது.

(இ) விருதுநகர், காவல்துறை சப்-இன்ஸ்பெக்டரின் தூண்டு தலால் நால்வர் விருதுநகரிலுள்ள காலம் குறிப்போர் (

) ஒருவரை 17—7-1969 அன்று இரவு தாக்கிய காரணத் மதுரை வட்டாரப் பணியாளர்கள் பரபரப்படைந்தனர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்த அரசு போக்குவரத்துத்துறை பணியாளர்கள் தங்களது குறைந்தபட்ச கோரிக்கையைக் கூட அரசாங்கம் ஏற்கவில்லை என்ற காரணம் காட்டி அரசாங்கத்திற்கு ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார் களா ? ஆம் எனில் எந்தத் தேதி ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படிப்பட்ட குறிப்பு இங்கே இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : மதுரையில் இருந்து விருது நகருக்குச் செல்ல இருந்த பஸ் ஒன்றில் ஏற்கனவே ரிசர்வ் செய்யப்பட்ட இடம் ஒன்றை போலீஸ் துறையாளர் ஒருவருக்குக் கொடுக்கச் சொல்ல, அதற்குச் சம்மதிக்காத காரணத்தினால் சப்-இஸ்பெக்டர் மருதையா என்பவர் செக்கிங் இஸ்பெக்டரை அடித்ததாகப் புகார் சொல்லப்பட்டதே, அந்த சப்-இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தக் காரணம் காட்டிதான் போக்குவரத்துத்துறை பணியாளர்கள் பஸ்களை எடுக்க மறுத்தனர். அந்த சப்-இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். ஆனால் குற்றம் நிரூபிக்கப்படவில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : சாதாரண சிறு விஷயங்கள் நடந் தாலும் கூட உடனடியாக அரசாங்கத்திற்கும், பொதுமக்களுக்கும், இடைஞ்சல் ஏற்படக்கூடிய வகையில் வேலைநிறுத்தல் ஒரு வியாதி யாகப் பரவிக்கொண்டிருக்கிறதே, அதைத் தடுக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வியாதிக்கு நல்ல மருந்து கொடுத்தால் தீர்ந்துவிடும்.

தெற்கு மாங்குடியிலுள்ள ஒன்றியப்பள்ளி கட்டடம்

***528 வினா—திரு. எஸ். சிவசுப்ரமணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா, குமராட்சி ஊராட்சி ஒன்றியத் தைச் சேர்ந்த தெற்கு மாங்குடி பஞ்சாயத்தில், யூனியன் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு எந்த தேதியில், யூனியனில் தீர்மானம் போடப்பட்டது ?

1970 மார்ச் 24]

(இ) எஸ்டிமேட் தொகை எவ்வளவு?

(உ) பள்ளிக் கட்டடம் எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 27—7—1966.

(இ) ரூபாய் 9,000.

(உ) விரைவில் கட்டி முடிக்கப்படும்.

திரு. எஸ். சிவசுப்ரமணியன் : தலைவர் அவர்களே, இந்தத் தேதி நிர்ணயம் செய்யப்பட்டும் கூட இவ்வளவு கால தாமதத்திற்கு என்ன காரணம்? இந்த யூனியன் கட்டிடம் அரிசனத் தெருவைத் தொட்டுக்கொண்டிருக்கிறது என்று ஆட்சேபித்தார்களா? அல்லது, அந்தப் பள்ளிக்கூட கட்டிடம் அரிசனத் தெருவைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று ஆட்சேபித்தார்களா? அந்த ஆட்சேபனைகளின் காரணமாகத்தான் இந்த வேலை நடைபெற வில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் ஏனுல் காலதாமதம் ஏற்பட்டது என்று கேட்டுவிட்டு அவர்களே விளக்கமும் சொன்னார்கள். அரிசனத் தெருவை தொட்டுக் கொண்டிருக்கிறது என்பதாக ஆட்சேபனை எழுப்பப்பட்டதாகத் தெரியவில்லை. இப்போது பள்ளிக்கூடம் நடந்துகொண்டிருக்கிற இடத்திலேயே கட்டப்படவேண்டும் என்பதாக தொகுதி உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் மூலமாக குமராட்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பம் கொடுத்தார்கள். அதுபற்றி ஒன்றியத்தின் மூலமாக மாங்குடி பஞ்சாயத்து கருத்து கேட்கப்பட்டது. இதுவரை பதில் வரவில்லை. வந்தவுடன் ஊராட்சி ஒன்றியத்தையும் கலந்துகொண்டு முடிவு எடுக்கலாம். அந்த வகையில மாண்புமிகு உறுப்பினரும் ஒத்துழைக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப் பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) நடைமுறைக் கேள்வி.

அதிக வினாக்களுக்கு விடையளிக்காமல் இருப்பது குறித்து

திரு. வி. கே. கோதண்டராமன் : சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் 1,600-க்கும் அதிகமாகக் கேள்விகள் கொடுத்திருக் கிறேன். அதுபற்றி அறையில் கேட்கச் சொன்னார்கள். கேட்டு விட்டேன். அவையில் கேட்கச் சொன்னார்கள் கேட்டுவிட்டேன். 225 கேள்விகளுக்கே பதில் சொல்லப்பட்டிருக்கின்றன. வருடம் 3 ஆகியும் பாக்கிக் கேள்விகள் என்ன ஆயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர் , இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. திரு. கோதண்டராமன் அவர்கள் ஏற்கனவே இந்த முறை மீட்டை ஒரு முறை இந்த அவையிலேயே எடுத்துச் சொல்லி,